DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 281/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : தட்சிணாமூர்த்தி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 23rd October 2025.

1,2 **எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் பானுமதி எனது சித்தி ஆவார். அவர் தற்போது இறந்துவிட்டார். எதிரிகள் ஆனந்த் மற்றும் வேலுச்சாமியை எனக்கு தெரியும். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

போலீசார் விசாரணையில் கடந்த 05.08.2015 ம் தேதி மாலை 6 மணிக்கு நானும், என் அம்மா ஜெயாவும், எனது சித்தி பானுமதியும் பனையூர் முத்தாலம்மன் கோவில் சாமிகும்பிட சென்றபோது அங்கு வந்த எதிரிகள் என் அம்மா மற்றும் சித்தியை பார்த்து கெட்டவார்த்தையால் பேசி அவமானப்படுத்தினார் என்றும், பின்னர் அவர்களை கம்பால் அடித்து காயப்படுத்தினார் என்றும், சட்டையை பிடித்து இழுத்து அவமானப்படுத்தினார், பின்னர் கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், நான் நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை வழக்கிலிருந்து விடுவிக்க தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**